00017

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

விசேட தேவைகள் சார் கல்வியில் பட்டமேல் டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் - 2022/2023

இறுதிப்பரீட்சை – 2022/2023

**SNP8340/SNP8530–** விசேட தேவைகள் சார் கல்விக்கான உளவியல்

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 09.12.2023 நேரம்: மு.ப. 09.30 - பி.ப 12.30

பகுதி **I** இன் சகல வினாக்களுக்கும் பகுதி **II** இன் எவையேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

## பகுதி – I

1. பிள்ளையொன்றின் "பூரண விருத்தி" என்பதனால் கருதப்படுவது யாதென உதாரணமொன்றின் துணையுடன் சுருக்கமாக விளக்குக.
2. "கல்வி உறவியலில் பரிசோதனை முறையினை பயன்படுத்துவது கடினமானதாகும்." இரண்டு (02) காரணங்களின் துணையுடன் இக்கூற்றினை நியாயப்படுத்துக.
3. இலங்கையின் சூழமைவில் விசேட கல்வித் தேவைகள் கொண்ட பிள்ளை ஒன்றின் ஆளுமையில் செல்வாக்குச் செலுத்தும் ஐந்து (05) காரணிகளைக் குறிப்பிடுக.
4. விசேட கல்வித் தேவைகள் கொண்ட பிள்ளைகளின் வளர்ச்சி மற்றும் விருத்தியுடன் தொடர்புபட்ட வகையில் பரம்பரையின் வகிபாகம் பற்றி கலந்துரையாடுக.
5. குறுகிய கால ஞாபகம் மற்றும் நீண்ட கால ஞாபகம் என்பவற்றுக்கிடையிலான வேறுபாடுகளை பொருத்தமான உதாரணங்களுடன் சுருக்கமாக விளக்குக.
6. கட்டிளமைப்பருவம் ஏன் புயல் வீசும் மற்றும் அழுத்தம் நிறைந்தது என கூறப்படுகின்றது? இரண்டு (02) உதாரணங்களின் துணையுடன் விளக்குக.
7. மொழிக்கற்றல் தொடர்பான இயலாமையைக் கொண்ட பிள்ளையொன்றின் ஞாபகத்தை முன்னேற்றுவதற்குப் பயன்படுத்தக்கூடிய நுட்பங்கள் ஐந்தினை (05) பட்டியற்படுத்துக.
8. புருணரின் அறிகைசார் விருத்தியும் விசேடக் கல்வித் தேவைகள் கொண்ட பிள்ளைகளுக்கு வசதிப்படுத்துவதற்காக அதன் பிரயோகத்தையும் சுருக்கமாக விளக்குக.

**(05 x 08 = 40** புள்ளிகள்)

## பகுதி – II

9.

**i.** கல்வி உளவியல் எனும் பதத்தினை ஏற்றுக் கொள்ளப்பட்ட வரைவிலக்கணம் ஒன்றின் துணையுடன் வரைவிலக்கணப்படுத்தி அதனை உங்களது சொந்த வார்த்தைகளில் விளக்குக.

**(04** புள்ளிகள்)

**ii.** விசேட தேவைகள் கல்வி தொடர்பான கல்வி உளவியலை கற்கும் ஆசிரியர் ஒருவர் பெற்றுக் கொள்ளக் கூடிய நான்கு (04) நன்மைகளைச் சுருக்கமாக விளக்குக

**(06** புள்ளிகள்)

**iii.** விசேடக் கல்வித் தேவைகளைக் கொண்ட பிள்ளைகளுக்காக கற்றல் சந்தர்ப்பங்களை ஒழுங்கமைக்கும் போது ஆசிரியரின் வகிபாகத்தினை கல்வி உளவியல் சூழமைவின் கீழ் பகுப்பாய்வு செய்க.

**(10 புள்ளிகள்)**

10.

**i.** நடத்தைவாத கற்றல் கொள்கை மற்றும் அறிகைசார் கற்றல் கொள்கை என்பவற்றை மூன்று (03) உதாரணங்களின் துணையுடன் வேறுபடுத்துக.

**(06 புள்ளிகள்)**

**ii.** அறிகைசார் கற்றல் கோட்பாடுகள் மூன்றினை (03) குறிப்பிட்டு அக்கோட்பாடுகளில் ஒன்றின் அடிப்படை கொள்கைகளை விளக்குக.

**(06 புள்ளிகள்)**

**iii.** மேலே நீங்கள் குறிப்பிட்ட அறிகைசார் கற்றல் கோட்பாட்டின் அடிப்படை கொள்கைகளை, ஒரு விசேடக் கல்வி தேவைகள் சார் ஆசிரியர் என்ற வகையில் வகுப்பறையில் எவ்வாறு பிரயோகிப்பீர்கள் என விளக்குக.

**(08 புள்ளிகள்)**

11.

**i.** பிள்ளை ஆய்வு முறைகளில் பரிசோதனைசார் முறைகள் மற்றும் பரிசோதனைசாரா முறைகள் என்பவற்றுக்கிடையிலான மூன்று (03) வேறுபாடுகளைக் குறிப்பிடுக.

**(06 புள்ளிகள்)**

**ii. A.** பிள்ளை ஆய்வு முறைகளில் பரிசோதனைசார் முறைகள் நான்கினை (04) குறிப்பிடுக.

**B.** மேற்படி பரிசோதனைசார் முறைகளில் ஒன்றினை (01) தெரிவு செய்து, உங்களுடைய வகுப்பறையிலுள்ள விசேட கல்வித் தேவைகள் கொண்ட மாணவர்களைப் பற்றி ஆய்வு செய்வதற்காக எவ்வாறு பிரயோகிப்பீர்கள் எனக் கலந்துரையாடுக.

**(06 புள்ளிகள்)**

**iii.** மேலே நீங்கள் குறிப்பிட்ட முறையினை வகுப்பறையில் பிரயோகிக்கும் போது முகங்கொடுக்கும் மூன்று (03) அனுகூலங்களையும் மூன்று (03) பிரதிகூலங்களையும் விளக்குக.

**(08 புள்ளிகள்)**

12.

**i.** ஆரம்ப மனவெழுச்சிகள் நான்கினை (04) குறிப்பிட்டு அவை எவ்வாறு இரண்டாம் மனவெழுச்சிகளின் விருத்தியில் தாக்கம் செலுத்துகின்றது என விளக்குக.

(04 புள்ளிகள்)

**ii.** "விசேடக் கல்வித் தேவைகள் கொண்ட பிள்ளைகளின் ஆளுமை விருத்தியில் மனவெழுச்சி விருத்தி மிகவும் முக்கியமானது" நீங்கள் இக்கூற்றுடன் உடன்படுகின்றீர்களா? மூன்று (03) உதாரணங்களின் துணையுடன் உங்களுடைய விடையினை நியாயப்படுத்துக.

(06 புள்ளிகள்)

**iii.** விசேடக் கல்விசார் தேவைகள் கொண்ட பிள்ளைகளிடத்தில் ஆரோக்கியமான மனவெழுச்சிகளை விருத்தி செய்வதில், விசேட தேவைகள் கொண்ட கல்வியுடன் தொடர்புபட்ட ஆசிரியர் ஒருவர் என்ற வகையில் உங்களுடைய வகிபாகம் பற்றி கலந்துரையாடுக.

(10 புள்ளிகள்)

13.

**i.** பியாஜேயின் அறிகை விருத்தி கோட்பாடு மற்றும் விக்கொட்ஸ்கின் அறிகை விருத்தி கோட்பாடு ஆகியவற்றுக்கிடையிலான அடிப்படை கொள்கைகளை வேறுபடுத்துக.

**(06** புள்ளிகள்)

**ii.** பியாஜேயின் அறிகை விருத்தி கோட்பாட்டிற்கு அமைவாக பிள்ளைகளின் அறிகை விருத்தி செய்வதற்கு வசதியேற்படுத்துவதற்காக ஆசிரியர் என்ற வகையில் நீங்கள் பயன்படுத்தும் நான்கு (04) உபாயங்களை விளக்குக.

**(06** புள்ளிகள்)

**iii.** மேலே குறிப்பிட்ட உபாயங்களை விசேட கல்விசார் தேவைகள் கொண்ட பிள்ளைகளிடத்தில் பிரயோகிக்கும் போது ஆசிரியர் முகங்கொடுக்கும் **மூன்று** (03) சவால்களையும் அவற்றினை எதிர்கொள்ளுவதற்கான ஆலோசனைகள் **மூன்றினையும்** (03) முன்வைக்குக.

**(08** புள்ளிகள்)

14. **"விசேட கல்விசார் தேவைகள் கொண்ட பிள்ளைகளின் கற்றலை வசதிப்படுத்துவதில் ஊக்குவிப்பு ஒரு பிரதான வகிபங்கினை ஏற்கின்றது."**

**i.** ஒரு தரமான வரைவிலக்கணத்தின் துணையுடன் ஊக்கல் பற்றிய எண்ணக்கருவினை வரைவிலக்கணம் செய்க.

**(04** புள்ளிகள்)

**ii.** A. மானிடவாத ஊக்கல் கோட்பாடுகளில் உள்ளடங்கும் **இரண்டு** (02) கோட்பாடுகளை பெயரிடுக.

B. மேற்படி கோட்பாடுகளில் **ஒன்றினை** (01) தெரிவு செய்து அதன் பிரதான கொள்கைகளை சுருக்கமாக விளக்குக.

**(08** புள்ளிகள்)

**iii.** மேலே குறிப்பிட்ட பிரதான கொள்ளைகளை கொண்ட வகுப்பறை சூழலில் விசேட கல்வித் தேவைகள் கொண்ட மாணவர்களை ஊக்குவிப்பதற்கு எவ்வாறு பிரயோகிக்கலாம் என கலந்துரையாடுக.

**(08** புள்ளிகள்)

*-முழுப்பதிப்புரிமை பெற்றது -*